வெளியீடு எண்.17-2016 நாள்: 09.07.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் மாதாந்திர நமூனாக்களை இணைய வழியில் புதிய இணையதளம் மூலம் எளிய முறையில் தாக்கல் செய்ய வணிகர்களுக்கும், அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. துணை இயக்குநர் (வணிகவரிகள்) திருமதி.ஜெ.சத்யா அவர்கள் தகவல்.

******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 29.01.2016 அன்று தொடங்கி வைக்கப்பட்ட வணிகவரித்துறையின் e-C TAX எனப்படும் ஒருமுகப்படுத்தப்பட்ட கணினிவழி தீர்வு திட்டம் (Total Solution Project) தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

வணிகர்களின் தேவைகளை மையப்படுத்தியும் மற்றும் துறையின் வரி நிர்வாகத்தை மேம்படுத்தவும் இத்திட்டத்தை வணிகவரித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால் வணிகர்கள் வரிவிதிப்பு வட்டங்களுக்கு நேரடியாக வர வேண்டிய அவசியம் வெகுவாக குறைகிறது.

முதல் கட்டமாக பதிவுச் சான்றிதழ் மற்றும் இதர படிவங்கள் உருவாக்கிக் கொள்ளுதல் போன்ற வசதிகள் இணைய தளம் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

அடுத்தகட்டமாக, ஜுலை 2016 முதல் (ஜுன் மாதத்திற்கான நமூனாக்கள்) மாதாந்திர நமூனாக்களை இணைய வழியில் புதிய இணைதளம் மூலம் எளிய முறையில் தாக்கல் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணைய வசதிகளை பெற்றிட வணிகர்களுக்கும், அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், வணிகர்களுக்கு அந்தந்த கோட்ட தலைமை அலுவலகங்கள் மூலம் பயிற்சி வகுப்புகள் தொடர்ச்சியாக நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வணிக வரி அலுவலகங்களிலும், உதவி மையம் (Help Desk) உருவாக்கப்பட்டு வணிகர்களுக்கு இலகுவாக இவ்வசதிகளை பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இனி வருங்காலங்களில் வணிகர்கள் மாதாந்திர நமூனாக்களை (ஜுன் 2016 மாதத்திற்கான நமூனாக்கள் தொடங்கி) புதிய இணையதளம் மூலம் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த வசதியினை பெற வணிகர் https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு (Signup) செய்ய வேண்டியது அவசியம். பதிவு (Signup) செய்யாத வணிகர்கள் உடனடியாக பதிவு செய்து (Signup) மாதாந்திர நமூனாக்களை புதிய இணையதளத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வணிகர்கள் 24 மணி நேரமும் கட்டணமில்லா தொலைபேசி 1800 103 6751 எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் இதற்கான வழிமுறைகளை அறிந்துகொள்ளலாம் என்றும் துணை ஆணையர் (வணிகவரிகள்) திருமதி.ஜெ.சத்யா அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.